20.09.2024

O.S.No.345/2010

வா.சா.3.திரு.மூர்த்தி த.பெ.அய்யாவு

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவின் ஒரு பகுதியாக புரட்டாசி மாதம் அய்யனார் கோவிலுக்கும், கருப்பணசாமி கோவிலுக்கும் திருவிழா நடத்தப்படும் என்றால் சரிதான். இந்த திருவிழாவினை கோவில் மரியாதைகாரர்கள் மற்றும் ஊர்பொது மக்கள் அனைவரும் இணைந்து கொண்டாடுவார்கள் என்றால் சரிதான். இந்த திருவிழாவின் போது 6 மரியாதைகாரர்களுக்கும் கோவிலில் வைத்து கோவில் பூசாரியான வேளார் அவர்கள் மரியாதை அளிப்பார்கள் என்றால் சரிதான். இதற்கடுத்து கார்த்திகை மாதம் மந்தையம்மனுக்கு திருவிழா நடைபெறும் என்றால் சரிதான். இந்த திருவிழாவின் போது 6 மரியாதைகாரர்களுக்கும் கோவிலில் வைத்து கோவில் பூசாரியான வேளார் அவர்கள் மரியாதை அளிப்பார்கள் என்றால் சரிதான். திருவிழாவின் இறுதியாக பங்குனி அல்லது வைகாசி மாதத்தில் குதிரை எடுப்பு திருவிழா நடத்தப்படும் என்றால் சரிதான், பங்குனி மாதம்

பிடிமண் பிடித்து வைகாசி மாதம் மூத்த வாரிசுகள் மூலமாக குதிரை எடுப்பு வைபவம் நடைபெறும்.

2. இந்த குதிரை எடுப்பு திருவிழாவின் போது 6 மரியாதைகாரர்களுக்கும் கோவிலில் வைத்து கோவில் பூசாரியான வேளார் அவர்கள் மரியாதை அளிப்பார்கள் என்றால் சரிதான், அந்த குதிரை எடுப்பின் போது முதலில் கருப்பண சாமி கோவிலில் குதிரை எடுக்கப்படும் போது அங்கு வைத்து 6 மரியாதைகாரர்களுக்கும் மரியாதை உண்டு, அந்த குதிரை எடுத்து அய்யனார் கோவிலில் வைத்து கண் திறக்கும் போது 3ம் மரியாதைகாரர்களில் ஒரு பிரிவான கோடாங்கி பிடாரன் வகையறாவிற்கு மட்டும் அங்கு வைத்து கோவில் மரியாதை வழங்கப்படும். எனது பிராதில் 3ம் மரியாதைகாரர்களில் 2 பிரிவுகள் உள்ளன என்று எங்கும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, சொல்லி உள்ளேன். கோடாங்கி பிடரான் வகையறா பூர்வீகமாக எந்த ஊரைச் சார்ந்தவர்கள் என்றால் வெளியூரில் இருந்து புதுபபட்டிக்கு வந்து 4 தலைமுறைகளாக அந்த கிராமத்தில்தான் இருந்து வருகிறார்கள். கோடாங்கி பிடாரன் வகையறா குறிப்பாக எந்த ஊரில் இருந்தார்கள் என்றால் வெள்ளியங்குன்றத்தில் இருந்து வந்தார்கள்.

3. வெள்ளியங்குன்றம் கிராமத்தில் இருந்து வந்த எங்கள் ஊரைச்சார்ந்த நாட்டாமை வகையறா வீட்டில் கோடாங்கி பிடாரன் வகையறா பெண் எடுத்துள்ளார்கள். அவ்வாறு

பெண் எடுத்த பின்பு எங்கள் ஊரில் வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்கிறார்கள் என்றால் சரிதான். தாவா கோவில்களில் நினைவுக்கு எட்டாத காலம் முதல் திருவிழா நடந்து வந்ததாக எனது பிராதில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். 6ம் மரியாதை புதியதாக எப்படி, எங்கு வந்தது என்றால் 1968ல் அசல் வழக்கு எண்.186 தாக்கல் செய்து அதன் அடிப்படையில் தீர்ப்பு கூறப்பட்டு அதன்படி 6ம் மரியாதை வழங்கப்பட்டது. அந்த வழக்கானது ஹரிஜன மக்கள் வாதியாகவும், எங்கள் கிராம நிருவாகத்தினருக்கு எதிராக இருந்து வழக்கு தாக்கல் செய்தார்கள். நான் கூறுவது போல் ஹரிஜன மக்கள் வாதியாக இருநது ந.மொக்கை இளங்கான் பிரதிவாதியாக இருந்து வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.186/1968 இதே நீதிமன்றத்தில் ந.மொக்கை இளங்கான், அய்யாச்சி மூப்பனார், மொக்கை மூப்பனார், முத்து அம்பலம், மகாலிங்க கோனார், அய்யாச்சாமி ஆகியோர்கள் வாதிகளாவும், அழகன் மற்றும் இருபது நபர்கள் பிரதிவாதிகளாகவும் இருநது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரதிான்.

4. அந்த வழக்கில் தாவா கோவில் மரியாதை மேற்படி வாதிகளாகிய 5 நபர்களுக்கு மட்டும் தான் என்ற அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல, அவர்கள் 5 பேரும் தான் நிர்வாக பொறுப்பு என்ற அடிப்படையில் அந்த வழக்கினை தாக்கல் செய்திருந்தார்கள். அந்த வழக்கில் வாதிகளாகிய மேற்சொன்ன 5 நபர்களும் தாவா கோவில்

மரியாதை பெற தகுந்தவர்களா என்ற எழுவினா வனையப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். அசல் வழக்கு எண்.186/1968ல் கோடாங்கி பிடாரன் வகையறாவைச் சார்ந்தவர்கள் வாதியாகவோ, பிரதிவாதியாகவோ இருநதார்களா என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.186/1968 வழக்கு நடைபெறும் போதும் சரி, அதற்கு முன்பும் சரி 3வது கரை மரியாதை மொக்கையன் மூப்பனார் வகையறாவுக்கு மட்டும தான் என்றாலும, நான் கூறுவது போல் 2 பிரிவாக பிரிந்து கோடாங்கி பிடாரன் வகையறாவுக்கும் மரியாதை உண்டு என்று கூறுவது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல.

5. கோடாங்கி பிடாரன் வகையறாவிற்கு தாவா கோவில் மரியாதை இல்லை என்பதால் தான் அசல் வழக்கு எண்.186/1968 வழக்கில் அவர்களை தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.186/1968 வழக்கில் அந்த தாவா கோவில்களில் 6ம் மரியாதைகாரர்களுக்கு கோவில்களில் நிர்வாக பொறுப்பும் உண்டு என தீர்மானிக்கப்பட்டது என்றால் சரியல்ல, மரியாதை மட்டும் உண்டு என தீர்மானிக்கப்பட்டது. அசல் வழக்கு எண்.186/1968 வழக்கில் 6ம் மரியாதைகாரர்களுக்கு கோவில் மரியாதையும் உண்டு, நிர்வாக பொறுப்பிலும் பங்கு உண்டு என தீர்மானிக்கப்பட்டது என்றாலும் வழக்கு விரங்கள் தெரியாமல், நான் பொய்யாக அதனை மறுத்து சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.186/1968

வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக மதுரை சார்பு நீதிமன்றத்தில் 3ம் மரியாதையைச் சார்ந்த மொக்கையன் மூப்பனார் மேல்முறையீடு செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த மேல்முறையீட்டு வழக்கில் 6ம் மரியாதைகாரர்களுக்கு கோவில் மரியாதை மட்டுமதான் உண்டு எனவும், நிர்வாகத்தில் பங்கு இல்லை எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதே மேல்முறையீட்டு வழக்கில் அசல் வழக்கில் வாதிகளாக இருந்த 5 நபர்களுக்கு மட்டும் முதல் 5 கோவில் மரியாதை உண்டு தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரிதான்.

6. மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் 3வது மரியாதைகாரர்களில் ஒரு பிரிவாக உள்ளதாக சொல்லப்படும் கோடாங்கி பிடாரன் வகையறா தரப்பினராக இணைந்து வழக்காடினார்களா என்றால் இல்லை. கோவில் திருவிழா நடத்துவதற்கு வருமானம் எந்த வகையில் வருகிறது என்றால் கண்மாய் குத்தகை, வாத்து குத்தகை, கடை நடத்துபவர்கள் கொடுக்கும் பணம் ஆகியவை தான் பிராதான வருமானம். அதே போல் கோவில் சார்பாக வளர்க்கப்படும் ஜல்லிக்கட்டு மாடுகளை விற்பனை செய்து அதன் மூலம் வருமானமும் கோவில் திருவிழாவிற்கு பயன்படும் என்றால் சரிதான். இந்த வருமானம் அனைத்தும் நாட்டாமை வகையறாவான 1ம் மரியாதைகாரர்கள் மற்றும் தண்டல் வகையறாவான 2ம்மரியாதைகாரர்கள் ஆகியோர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றால் சரிதான். இந்த வருமானத்தினை பொறுத்து கோவில் திருவிழாவின் போது ஏற்படும் செலவு கணக்குகளை 1,

2 மரியாதைகாரர்கள் மற்ற 6 மரியாதைகாரர்களிடம் ஒப்படைப்பார்கள் என்றால் சரிதான். அந்த கணக்கு வழக்குகள் சரிபார்க்கப்பட்டு கிராம நோட்டில் எழுதப்படும் என்றால் சரிதான். அந்த நோட்டில் 6 மரியாதைகாரர்களும் கையொப்பம் செய்வார்கள் என்றால் சரிதான். அந்த நோட்டுக்கள் இரும்பு பெட்டியில் வைத்து பூட்டப்பட்டு ஊர் மந்தையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. ஒவ்வொரு மரியாதைகாரர்கள் சார்பாக உள்ள நிர்வாகஸ்தர்கள் மொத்தம் 5 நபர்கள் உண்டு என்றால் சரிதான், அவர்களிடம் மேற்படி மந்தையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள இரும்பு பெட்டிக்கு தலா ஒரு சாவி வழங்கப்படும் என்றால் சரிதான். அந்த பெட்டிக்குள் இருக்கும் கிராம கணக்கு நோட்டில் 3வது மரியாதைக்குரியவர்களாக மொக்கையன் மூப்பனார் மற்றும் அவரது சகோதரர் மூக்கன் மூப்பனார் ஆகியோர்களது கையொப்பம் மட்டும் தான் அதில் இருக்கும் என்றால் சரிதான், அவர்கள் 3ம் நிர்வாகஸ்தர்கள் என்பதால் அவர்கள் கையொப்பம் மட்டும் இருக்கும். அந்த கிராம கணக்கு நோட்டில் கோடாங்கி பிடாரன் வகையறாவைச் சார்ந்தவர்கள் கையொப்பம் எதுவும் காணப்படாது என்றால் அந்த பெட்டியை பார்த்தால்தான் தெரியும். நீதிமன்ற உத்தரவுப்படி அந்த இரும்பு பெட்டியை நீதிமன்றத்திற்கு வரவழைத்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான்.

8. தாவா கோவில் வருமானத்தினை பொறுத்து மதுரை சார்பு நீதிமன்றம் உத்தரவின் பேரில் வழக்கறிஞர் நியமனம் செய்யப்பட்டு அவர் கணக்கு வழக்குகளை பராமரித்து வந்த விரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கிலும் 3ம் மரியாதைகாரர்கள் சார்பாக மொக்கையன் மூப்பனார் வகையறாதான் வாதிகளாக இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த

வழக்கிலும் கோடாங்கி பிடாரன் வகையறா யாரும் தரப்பினர்களாக இல்லை என்றால் சரிதான். எந்த காலத்திலும் கோவில் நிர்வாகத்திலும், கோவில் மரியாதையிலும் கோடாங்கி பிடாரன் வகையறாக்கு பங்கு இல்லை என்பதால் தான் அவர்கள் மேற்சொன்ன எந்த வழக்கிலும் தரப்பினர்களாக இல்லை என்றால் சரியல்ல. மதிய பிடாரன், வீரணன், பொன்னாண்டி, பாக்கியம் ஆகிய 4 நபர்கள்தான் கோடாங்கி பிடாரன் வகையறாவைச் சார்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன 4 நபர்களும் எங்களை அசல் வழக்கு எண்.632/1987 வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க சொல்லி மனு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும், அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

9. அந்த மனு ஏற்கனவே தள்ளுபடி செய்யப்பட்டு விட்டபடியால் அதே கோரிக்கையைபொறுத்து இந்த வழக்கில் 3ம்மரியாதை கோடாங்கி பிடாரன் வகையறாவிற்கு உண்டு என நான் கட்சி செய்வது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. தாவா கோவில்களுக்கு கடைசியாக 1984ம் ஆண்டு திருவிழா நடத்தப்பட்டது. அதன் பின்பு எதற்காக திருவிழா நடத்தப்படவில்லை என்றால் கோவில் பணத்தினை அப்போதைய நிர்வாகஸ்தர்கள் முறையாக பராமரிக்கவில்லை என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அது முதல் கோவில் திருவிழா நடைபெறவில்லை. கோவில் கணக்கு வழக்குகளை பராமரிப்பது 1 மற்றும் 2 மரியாதைகாரர்கள் என ஏற்கனவே நான் சொல்லி உள்ளதால் அந்த கால கட்டத்தில் 1 மற்றும் 2 மரியாதைகாரர்கள் சார்பாக நிர்வாகத்தில் இருந்த நபர்கள் தான்

கணக்கிணை ஒழுங்காக ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அதனால்தான் கோவில் திருவிழா இதுவரை முறையாக கொண்டாடப்படவில்லை என்றால் சரிதான்.

10. ஊர் சார்பாக ஏலம் விடப்பட்ட கண்மாய் 2004ம் ஆண்டு மீன்வளத்துறைக்கு சென்றுவிட்டது. எனது வாதப்படி ஊர்கண்மாய்களை ஏலம் விட்ட பணம் எல்லாம் 1984 முதல் 2004 வரை 1 மற்றும் 2 மரியாதைகாரர்கள் வசம் உள்ளது என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)